
www.Padasalai.Net www.TrbTnpsc.com

39.அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி,ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ)நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி,உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்துக் கடிதம் எழுதுக.

**40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41.அருளாளன் என்பவர்,"135,கம்பன் வீதி,தஞ்சாவூர்-5" என்ற முகவரியில் வசிக்கின்றார், அவரின் மகன் இளவரசன் தட்டச்சர்பணி வேண்டி நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பிக்கிறார். அதற்குரிய படிவத்தை நிரப்புக.

42.தமிழ்,தமிழர்,தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர்.அவர் எழுதிய தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை;அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை நீங்கள் படித்து முடித்தப் பின் உங்கள் துறையின் அறிவைக் கொண்டு தமிழுக்குச் செய்யக் கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

**ஆ. மொழி பெயர்க்க.**

**The golden son gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The Milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion . The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze . The breeze gently blows everywhere and makes everything pleasant..**

**பகுதி- 5 (மதிப்பெண்கள்-24)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3×8=24**

43.அ)தமிழின் இலக்கிய வளம் கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிற துறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை. –மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ)காற்று பேசியதைப் போல நிலம்,நீர்,வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுச் சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடல் அமைக்க.

44. அ)அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் பற்றி நீவீர் அறிந்தவற்றை எழுதி,அவருடன் விண்வெளிப்பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ)மங்கையராய்ப் பிறப்பதற்கே என்னும் தலைப்பில் அமைந்த சாதனைப் பெணகள் நால்வர் பற்றி எழுதுக.

45) அ)போதைப்பொருள் ஒழிப்பு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

**ஆ) பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

போராட்டக் கலைஞர் –பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக்கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர்

| ஆக்கம்: ச.சேட்டு மதார்சா,ஈரோடு |
|---|

# உமறுப்புலவர் இலக்கியக் கழகம்:தமிழ் மன்றத் தேர்வு – 2025

**பத்தாம் வகுப்பு - தமிழ்**

**நேரம்: 3.00மணி** **மதிப்பெண்கள்:100**

**பகுதி-1 (மதிப்பெண்கள் 15)**

**குறிப்பு :அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து , குறியீட்டுடன் எழுதவும்.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்' என்னும் தொடர் இடம் பெற்ற நூல்
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) திருக்குறள் ஈ) கொன்றை வேந்தன்

2.இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்--.இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்--
அ) கபிலர்,சிவபெருமான் ஆ) சிவபெருமான்,கபிலர்
இ) குலேசபாண்டியன்,சிவபெருமான் ஈ)சிவபெருமான்,குலேச பாண்டியன்

3.பொருந்தும் விடை வரிசையைத் தேர்த்து எடுக்க.
அ) கொண்டல் - 1.மேற்கு
ஆ) கோடை - 2.தெற்கு
இ) வாடை - 3.கிழக்கு
ஈ) தென்றல் - 4.வடக்கு
அ) 1, 2, 3, 4. ஆ) 3, 1, 4 , 2 . இ)4, 3, 2, 1. ஈ) 3, 4, 1, 2.

4.ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குப் பொருந்தாதப் பருவம்
அ) சிற்றில் ஆ) சிறுபறை இ) சிறுதேர் ஈ)ஊசல்

5. குறளும் நாலடியாரும் அமைந்துள்ள 'பா'வினம்
அ)அகவற்பா ஆ)வெண்பா இ)வஞ்சிப்பா ஈ)கலிப்பா

6. கானடை என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.
அ) கான் அடை – காட்டைச் சேர் ஆ) கால் உடை – காலால் உடைத்தல்
இ) கான் நடை – காட்டுக்கு நடத்தல் ஈ) கால் நடை – காலால் நடத்தல்

7. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ,நாலடியார் இவ்விலக்கியங்களுள் இருக்கும் தமிழ் எண்களைக் கண்டறிக.
அ) க0, ச ஆ) கஅ,ச இ) ச,கக ஈ) ச,கஅ

8. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி
அ)உவமை ஆ)தற்குறிப்பேற்றம் இ)உருவகம் ஈ) தீவகம்

9. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்'-- இப்பழமொழி உணர்த்தும் பொருள்.
அ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்து விட வேண்டும்.
ஆ) காலம் வரும் வரை முயன்று கொண்டே இருக்க வேண்டும் .
இ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.
ஈ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.

10.பாடு இமிழ் பனிக்கடல் பருகில் என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ)கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ)கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ)கடல்நீர் ஒலித்தல் ஈ)கடல்நீர் கொந்தளித்தல்

11. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ?
அ) கூவிளம் தேமா நாள் ஆ) கூவிளம் புளிமா காசு .
இ) கூவிளம் தேமா மலர் ஈ) புளிமா கூவிளம் பிறப்பு .

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**பாடலைப் படித்து , பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளிக்க.**

'விசும்பில் ஊழ் ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரே ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்'

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) பரிபாடல் ஆ)காசிக்காண்டம் இ)தேம்பாவணி ஈ) முல்லைப்பாட்டு
13. 'விசும்பு' என்னும் சொல்லின் பொருள் யாது?
அ) யுகம் ஆ)வானம் இ) மழை ஈ)சிறப்பு
14. கொடுக்கப்பட்டுள்ள அடிகளில் இருந்து அடி எதுகையை எடுத்து எழுதுக.
அ) உரு- உந்து ஆ) விசும்பில்-கருவளர் இ)கருவளர்-கிளர்ந்து ஈ)ஊழி-ஊழ்
15.இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ)கீரந்தையார் ஆ)கண்ணதாசன் இ)நாகூர் ரூமி ஈ)பெருஞ்சித்திரனார்

**பகுதி-2.(மதிப்பெண்கள்18)**

**பிரிவு -1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**( 21 ஆம் வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)** (4×2=8)

**16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க .**
அ.மொழிபெயர்ப்பு எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று.
ஆ.வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.
17.'காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' -உவமை உணர்த்தும் கருத்து யாது?
18.செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.
19.மெய்கீர்த்தி குறித்து நீவீர் அறிந்த செய்தி இரண்டினை எழுதுக.
20.உறங்குகின்ற கும்பகன்ன ' எழுந்திராய் எழுந்திராய் '
காலதூதர் கையிலே ' உறங்குவாய் உறங்குவாய்' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
21. 'வினை' என முடிவுறும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு-2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5×2 =10

**22.தொடரில் விடுபட்ட வண்ணச்சொற்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**
அ)வானம்-----------தொடங்கியது.மழைவரும் போலிருக்கிறது.
ஆ)கண்ணுக்குக் குழுமையாக இருக்கும்---------புல்வெளிகளில் கதிரவனின்---
-----------வெயில் பரவிக் கிடக்கின்றது.
**23. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**
அ)கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார்.கலைஞர்,எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார் **(கலவைச் சொற்றொடராக மாற்றுக.)**
ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன்,அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. **(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)**
25. **கலைச்சொல் எழுதுக.** அ.) space technology ஆ) Belief
26. 'பொறித்த' பகுபத உறுப்பிலக்கணம் காண்க.
27.உணவு,விருந்து சார்ந்த பழமொழி ஒன்றினை எழுதி,விழிப்புணர்வு தொடர் எழுதுக.
28.புறத்திணைகளில் எதிர் எதிர் திணைகள் எவை?

**பகுதி-3 (மதிப்பெண்கள் 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.2 x 3 = 6**

29.உன்னைக் கவர்ந்த கலைஞரின் தமிழ்ப்பணி இரண்டினை எழுதுக.
30. 'பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரே'பொருள் விளக்கம் தருக .
**31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்கவேண்டும்என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார்.விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.
அ.)விருந்தோம்பல் வலியுறுத்த தம் நூலில் ஓர் அதிகாரத்தை வகுத்தவர் யார்?
ஆ)இல்லறம் எதற்கு?
இ) அனிச்ச மலரின் பண்பு யாது?

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாகவிடையளிக்கவும்.2 x 3 = 6**

**( 34- ஆம் வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

32.மலைபடுகடாம் கூறும் கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்து தலை விளக்குக?
33.மாளாத காதல் நோயாளன் போல - உவமை விளக்கும் செய்தி யாது?
**34 .அடி பிறழாமல் எழுதுக .**
அ.'சிறுதாம்பு தொடுத்த' என்ற முல்லைப்பாட்டுப் பாடல்.
அல்லது
ஆ.'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதி வெண்பாப் பாடல்.

**பிரிவு - 3** **2×3=6**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். -இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.
36.நச்சப்படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. - இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியைச் சுட்டி,விளக்குக.
37. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். - அலகிட்டு வாய்ப்பாடு தருக.

**பகுதி 4 (மதிப்பெண்கள்25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25**

38.அ)சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளைத்,தற்கால வணிக வளாகங்களோடும் , அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
(அல்லது)
ஆ)வள்ளுவம்,சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

Padasalai.Net